# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

### அ.சா. 10 (LW 13)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.சுப்பிரமணி** | **தொழில்** | |
| **த/ பெயர்** | நடராஜ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **25.08.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 3ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது திண்டுக்கல் நெட்டுத் தெருவில் குடியிருந்து வருகிறேன். தூய்மை பணியாளராக வேலை செய்கிறேன். வழக்கில் இறந்த மாசிலாமணி என் உறவினர் ஆவார். அவரை பார்ப்பதற்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்ற போது போலிசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். மாசிலாமணியை கொலை செய்து விட்டதாக கேள்விப்பட்டு நான் அரசு மருத்துவமனை சென்ற போது போலிசார் கேட்ட கையெழுத்துக்களை போட்டேன். என்னிடம் காட்டப்படும் 1வது எதிரி மற்றும் 2ம் எதிரி ஜெகன் ஆகியோர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையெழுத்துக்கள் என்னுடையதுதான்.அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த கையெழுத்துக்கள் மட்டும் **அ.த.சா.ஆ.9, அ.த.சா.ஆ.10.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்துக்களை 5,6 வருடங்கள் முன்பாக போட்டேன், தேதி, வருடம் ஞாபகம் இல்லை. 1,2 எதிரிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் எடுத்து ஆஜர் செய்த பொருட்களை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள 2வதாக போடப்பட்ட 3 கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.த.சா.ஆ.11, அ.த.சா.ஆ.12.அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

கடந்த 2019ல் நான் நெட்டுத் தெருவில் குடியிருந்தேன் என்றால் இல்லை. இறந்து போன மாசி என் உறவினர் ஆவார். மாசிக்கு யாருடனாவது பிரச்சனை

இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் விசாரணையில் கடந்த 19.03.2019 அன்று மதியம் 02.00 மணி அளவில் நானும் நெட்டுத் தெருவை சேர்ந்த ராமன் மகன் மணிகண்டனும் எம்.எஸ்.பி பள்ளியின் வடக்கு பக்கம் உள்ள இரயில்வே கேட் அருகே இருந்த போது நகர் வடக்கு காவல்நிலைய ஆய்வாளர் சிதம்பரனார் தெருவை சேர்ந்த செல்வராஜ் மகன் அஜித்குமார், மாலைப்பட்டியை சேர்ந்த சேதுராமன் மகன் ஜெகன் என்ற ஜாக் ஆகியோரை 02.30 மணி அளவில் கைது செய்து எங்கள் முன்பு விசாரித்த போது ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் மணிகண்டனும் கையெழுத்திட்டோம் என்றால் சரியல்ல. பின்னர் அதே தேதியில் 03.45 மணிக்கு ஜெகன் என்ற ஜாக் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதில் நானும் மணிகண்டனும் கையெழுத்திட்டோம் என்றால் சரியல்ல. அதே தேதியில் மாலை 05.15 மணிக்கு மாலைப்பட்டி ரோட்டில் சுப்புராம் பட்டறை பின்புறம் உள்ள புதரிலிருந்து அஜித்குமார் TN 57-L -3378 என்ற வண்டியின் கவரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த இரத்தம் பட்ட பேண்ட், சட்டை மற்றும் இரத்தம் பட்ட வீச்சருவாள் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அதே இடத்தில் மாலை 06.00 மணிக்கு ஜெகன் என்ற ஜாக் மேற்படி வண்டியிலிருந்து இரத்தக்கரை படிந்த ஜீன்ஸ் பேண்ட், முழுக்கை சட்டை, இரத்தக்கரை படிந்த இரும்பு கத்தி ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் பின்னர் அஜித்குமார் அதே இடத்தில் ஆஜர் செய்த TN 57-L -3378 என்ற இருசக்கர வாகனத்தை எங்கள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் அதில் நானும் மணிகண்டனும் கையெழுத்திட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எனக்கு தெரிந்த காரணங்களுக்காக உண்மையை மறைத்து எதிரிகள் ஒரே ஏரியாவை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.**

**மறு விசாரணை - இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.25 20:12:00 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.